<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 18.03.2025

**அசல் வழக்கு எண் 208/ 2012**

**வா.சா. 1 - வின்சென்ட் பால் ஆரோக்கியராஜ், த/பெ. ஆரோக்கியசாமி**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கின் விவரங்கள் நீங்கள் சொல்லித்தான் வழக்கில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்கள் வழக்கின்படி தாவா சொத்து உங்கள் தகப்பனார் ஆரோக்கிய சாமியின் பூர்வீக சொத்து என்று போட்டு உள்ளீர்கள் என்றால் கூர் சீட்டின்படி அது பூர்விக சொத்தாகும். உங்கள் தாவாவில் கூர் சீட்டின் படி உங்கள் அப்பாவின் பாகத்திற்கு வந்தது என்று சொல்லி உள்ளீர்களா என்றால் சொல்லி உள்ளேன். உங்கள் தாவா சொத்து அப்பாவினுடைய பூர்வீக சொத்து இது நத்தம் சொத்து என்று சொல்லி உள்ளீர்களே தவிர கூர் சீட்டு படி உங்கள் அப்பாவிற்கு வந்தது என்று நீங்கள் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியில்லை. இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்பொழுது செட்டில்மெண்ட் ஆவணம் மட்டுமே தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்படும் பொழுது கூர்சீட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த கூர்சீட்டின் அடிப்படையில் திரும்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் **41/2011** நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கில் நீங்கள் மூன்றாவது பிரதிவாதி என்றால் சரிதான். உங்கள் தந்தை ஆரோக்கியசாமி முதல் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கானது உங்கள் தந்தை ஆரோக்கியசாமி இந்த வழக்கு சொத்து பொருத்தும் மற்ற சொத்துக்கள் பொருத்தும் **4** சொத்துக்கள் குறித்து செட்டில்மெண்ட் எழுதி உள்ளார் அந்த செட்டில்மெண்ட் ஆவணங்கள் அனைத்துமே செல்லாது என்று விளம்புகை கோரி மேற்படி பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த கூர் சீட்டு தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்தேன். அந்த கூர்சீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உங்கள் அப்பா எழுதிய செட்டில்மெண்ட்

ஆவணம் செல்லாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்புக்கு எதிராக நீங்கள் காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஏ.எஸ்.**23/2015** மேல்முறையீடு செய்தீர்கள் என்றால் அந்த மேல்முறையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த செட்டில்மெண்ட் செல்லாது என்று உறுதி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு எதிராக நீங்கள் இரண்டாம் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரியில்லை இரண்டாம் மேல்முறையீடு எண் ஏ.எஸ்.**100/2018** நிலுவையில் உள்ளது தடையாணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திரும்பெரும்புதூர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த பொழுது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஓ.எஸ் **41/2011** வழக்கு திருப்பெரும்புதூர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த பொழுது இங்கே எந்த வழக்கு தாக்கல் செய்தீர்களா என்றால் சரிதான். இந்த வழக்கின் சர்வே எண் **51** என்று சொல்லி உள்ளீர்கள் மொத்த கிராமத்தினுடைய சர்வே எண் **51** என்று சொன்னால் எனக்கு தெரியாது. சர்வே எண் **51**ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது . ஜக்குபந்தி குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்து உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வந்ததா என்றால் வரவில்லை. சர்வே எண் **51** எங்க என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சொல்ல முடியும். ஜக்குபந்தி குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்து **23** அடிக்கு கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு **41** அடி என்று ஏ பி சி டி என்று குறிப்பிட்டு உள்ளீர்கள் என்றால் சரிதான். அதனுடைய நாற்புற எல்லைகள் கிழக்கில் சந்தன மேரி வடக்கில் சூசை ராஜ் வகையறாக்கள், தெற்கில் பால் நெல்லூர் வல்லம்ரோடு, மேற்கில் கோயில் நிலம் கல்லறைக்கு செல்லும் வழி ஆகும். வடக்கில் சூசை ராஜ் வாரிசுகள் தான் இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்கில் மேற்கில் உங்களுடைய நிலம் என்று ஜக்குபந்தியில் குறிப்பிட்டுள்ளீர்கள் தற்பொழுது அதனை கோயில் நிலம் என்று சொல்கிறீர்கள் அது உங்கள் நிலமா அல்லது கோயில் நிலமா என்றால் கோயில் நிலம்தான். மேற்படி வழக்கில் உங்கள் தந்தை சாட்சி சொன்னார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு புல வரைபடம் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல்

செய்யவில்லை. உங்கள் தாத்தா பெயர் மரியண்ண ரெட்டி என்றால் சரிதான். அவருக்கு நான்கு பிள்ளைகள் என்றால் சரிதான். உங்கள் பாட்டி பெயர் மதினா அம்மாள் என்றால் சரிதான். பிள்ளைகள் பெயர் முறையே **1.**ஆரோக்கியசாமி, **2.**பிலிப்ஸ், **3.**சூசைராஜ் **4.**அந்தோணிசாமி ஆகிய நான்கு பேர் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்பொழுது பிலிப்ஸ் மற்றும் சூசை ராஜ் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். பிலிப்ஸ் என்பவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். வாரிசு கிடையாது என்றால் சரிதான். அந்தோணிசாமி வழக்கு தாக்கல் செய்யும்பொழுது அமெரிக்காவில் பாதிரியாராக இருந்தாரா என்றால் இருந்தார் தற்பொழுது இந்தியாவில் தான் இருக்கிறார். நீதிமன்றத்தில் இருக்கிறார். சாமி இந்த வழக்கில் ஒரு தரப்பினராக இல்லை என்றால் சரிதான். தற்போது உங்களுடன் அந்தோணி சாமியுடன் வேறு யார் யாரெல்லாம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். அவர் மட்டும்தான் வந்துள்ளார். உங்கள் அப்பா ஆரோக்கியசாமி கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்தாரா என்றால் வில்லேஜ் எட்மேன் ஆக இருந்தார். பால் நல்லூர் கிராமத்தில் கிராம அதிகாரியாக இருந்தார் என்றால் இல்லை. உங்கள் தாத்தா மரியண்ண ரெட்டி **1954** இறந்தார். உங்கள் பாட்டி மதீனா அம்மாள் **1997** இல் இறந்து விட்டார் என்றால் சரிதான். சூசை ராஜ் வாரிசுகள் ஜோசப்பை மட்டுமே இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளீர்கள் மற்றவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் **41/2011** இல் கூர் சீட்டு அசல் தாக்கல் செய்தீர்களா என்றால் அசல் தாக்கல் செய்யவில்லை. காரணம் என்னவென்றால் அது தாள்தாளாக கிழிந்து விட்டதால் தாக்கல் செய்யவில்லை. கூர் சீட்டு முத்திரைத்தாளில் எழுதப்படவில்லை நோட்டுப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை எழுதியது ஆரோக்கியசாமி உங்கள் அப்பா என்று சொன்னால் சரிதான். அந்தக் கூர்சிட்டு ஆரோக்கியசாமி தான் எழுதினார் என்றால் சரிதான். அவர் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் போடவில்லை கடைசி பக்கத்தில் தான் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வேறு யார் கையொப்பம் போட்டுள்ளது என்றால் பிலிப்பு போட்டு இருக்கிறார் சூசைராஜ் போட்டு

இருக்கிறார் அந்தோணி சாமியை கையொப்பம் போட்டுள்ளார். சாட்சிகள் இல்லூரி ஜோதி ரெட்டி கையொப்பம் போட்டுள்ளார். கைரேகை பாட்டி மதினம்மாள் வைத்துள்ளார். ஆகுல ஜோதி ரெட்டி கைநாட்டு வைத்துள்ளார். முதல் முதலாக இந்த நீதிமன்றத்தில் அசல் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். வழக்கறிஞரின் வேண்டுக்கோலின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.